வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

உ
சிவமயம்

இந்து சாதனம்

HINDU ORGAN

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை சதம் 20

ரமபம்: விரோதி ௵ (1889) ஆவணிமீ 28-ம உ அச்சகம்: சைவபபிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பரணம் தொலைபேசி: 356

புத்- அக] யாழ்ப்பாணம்:- பிங்கள ௵ சித்திரை மீ உச - உ வெள்ளிக்கிழமை (6 - 5 - 1977) [இல: ரு

சிதம்பரம் "கோயில்" திருப்பணித் தொடக்கவிழா

ஓரிலட்சத்து இருபதினாயிரம் உடனடியாக உண்டியலிற் சேர்ந்தது

[எமது சிதம்பரம் சிறப்பு நிருபர் திரு. மா. பாலசுப்பிரமணியன்]

தில்லையம்பதி ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானின் திருக்கோயிலில் பல்லாண்டுகளாகத் திருப்பணிகள் செய்யப்பெறாது சிதைந்துள்ள நான்கு இராஜ கோபுரங்கள். திருமதில், மண்டபம் முதலிய சகல பகுதிகளையும் புதுமைத் தோற்றம் செய்வதற்கு கோயிலின் திருப்பணிக் குழுவினரின் வேண்டுகோளின்படி, தமிழ்நாடு அரசின் மாநில அறநிலைய ஆட்சித்துறைக்கு ஆணையர் உயர்திரு. எம். கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் கோயிலின் திருப்பணி கொடர்ந்து நடைபெறுவதற்கு 33 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யும்படிசெய்து திருப்பணிகளுக்கு 45 இலட்சம் ரூபாய் அங்கீகாரம் செய்து அரசினரின் மூலம் ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரத்திற்கு மான்யம் வழங்க உடனடியாக உத்தரவு பெற்று சென்ற 25-3-77 மாலை இராஜ சபையில் (ஆயிரங்கால் மண்டபத்தில்) திருப்பணிச் சபையின் தலைவராகவும், சிதம்பரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் அறநிலைய குழுவின் உறுப்பினருமான உயர்திரு. ஆர் கனகசபைபிள்ளை அவர்களின் தலைமையில் நிதி திரட்டும் திருப்பணி துவக்க விழா நடைபெற்றது.

செயலாளர் உயர்திரு. ஜி. வாகீசம்பிள்ளையவர்கள் எல்லோரையும் வரவேற்றார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முன்னாள் துணைவேந்தரான திருச்சி உயர்திரு ரி. எம். நாராயண சாமிப்பிள்ளை அவர்கள் கோயிலின் வரலாற்றைப்பற்றி சிறப்புரை கூறுகையில் பாரத நாட்டிலுள்ள மக்களுக்கு "கோயில்"கள்தான் உயிர் என்றும் இக் கோயில்தான் எல்லாவகையிலும் சிறப்புடைய கோயில் என்றும் ஆதாரங்களுடன் கூறினார்கள்.

மாநில அறநிலைய ஆணையாளர் உயர்திரு. எம் கே. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில் "உலகில் இந்திய நாடுதான் தெய்வீகத் தன்மையுள்ள உயிர் ஊட்டமுள்ள மண் என்றும் தமிழ் நாட்டில் மட்டும் 1 இலட்சம் கோயில்கள் உள்ளனவென்றும், அவைகளில் 55 ஆயிரம் கோயில்கள் ஒரு ஏக்கர் முதல் நிலங்கள் உள்ள கோயில்கள் என்றும், 50 ஆயிரம் கோயில்கள் நிலம் இல்லாத கோயில்களென்றும், 1 இலட்சம் கோயில்களில் 25 ஆயிரம் கோவில்கள் பாடல்கள் பெற்றுள்ளதாகவும், வைப்பு கோயில்களாகவுமுள்ளனவென்றும், தற்சமயம் 3 கோடி ரூபா திட்டத்தில் பல கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றனவென்றும், இவ்வாண்டில் ரூபா 16 இலட்சம் கோயில்களுக்கு மான்யம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அம முறையில் சிதம்பரம கோயிலுக்குத்தான் 1 இலட்சத்து 25 ஆயிரம் மான்யம் கொடுக்கப்படுகின்றது என்றும் மற்றக் கோயில்களுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மான்யங்கள் கொடுக்கப்படவில்லையென்றும் கூறினார்.

வளர்ச்சி 3-ம் பக்கம்

கார்த்திகை விழா

அகில இலங்கைத் திருப்புகழ் மாமன்ற ஆதரவில் கார்த்திகை நட்சத்திரவிழா 18-5-77 புதன் மாலை 4-45 மணி முதல் நிகழும். நல்லை, ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்கள் சிவத் தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆய்வுரை நிகழ்த்துவார். சங்கீத பூஷணம் எஸ். பாலசிங்கம் (யாழ். அ. இ. த. மன்றம்) திருப்புகழ் இன்னிசை விருந்தளிப்பார் இவ்விழா நல்லை ஆதீனத்தில் நிகழும்.

ஆதிகாலத்து முறை

ஆதி காலத்தில் "திருநீறு" (விபூதி) "ரணவ சிவபஞ்சாட்சர வேளவி" (யாகம்) மூலம் மாசி மகா சிவராத்திரி புண்ணிய காலத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, பிற்காலத்தில் நாளுக்கு நாள் வேள்வி மூலம் திருநீறு உற்பத்தி செய்வது மறைவுபட்டு, பின் ஆவின் (பசு) சாணத்தால் திருநீறு உற்பத்தி செய்துகொண்டு வருகின்றதை சைவ உலகம் நன்கு அறியும்.

மது மாமிசம். புகை வஸ்து முதலியவைகளைச் சாப்பிடாதவர்களும், ஈசுவர பக்தியுமுடையவர்களாக ஐந்து பேர்கள் வேண்டும். இவர்கள் சாதுக்களாகவோ இல்லற வாசிகளாகவோ இருக்கலாம். இவர்கள் ஐவரும் 5 நாட்களுக்குமுன்னமே ஒருவேளை உணவு உண்டு பய பக்தியாக நோன்பிருந்து வரல் வேண்டும். கட்டைகள் முழுதும் சந்தனக் கட்டைகளாகவோ அல்லது ஆல், அரசு, அத்தி மா, வன்னி முதலிய ஐந்துவகைக் கட்டைகளாகவோ அல்லது இவற்றில் ஒரே சாதிக் கட்டைகளாகவோ ஆயிரத்தெட்டு அல்லதுநூற்றெட்டும் அவசியம். சந்தனக் கட்டைகள் ஒன்பதும் முன்னமே தண்ணீரில் கழுவி சுத்தம்செய்து சுத்தமான இடத்தில் வெய்யிலில் காயவைத்துப் பின்பு சுத்தமான இடத்தில் வைத்திருக்க வேண்டும்; ஒவ்வொன்றும் கை மளவு கனமும், ஒரு முழம் நீளமாகவோ அல்லது ஒரு சாண் நீளம் மூன்று வீரல் கனமும் உள்ளதான சுள்ளியாகவோ இருக்கவேண்டும், புஷ்பம் தேங்காய் பழம் முதலிய எல்லாப் பூஜை சாமான்களும் தேட வேண்டும். நோன்பு இருந்த ஐவரும் நீராடிய பின்பு ஈசுவரனுக்கு பூசைசெய்து வேள்வியைத் தொடங்க வேண்டும். கட்டைகளாக இருந்தால் சுத்தமான தரையிலோ சுள்ளிகளாக இருந்தால் அகலமான வாயுயுள்ள பெரிய மண் சட்டியை வைத்துச் சுத்தம்செய்து விபூதி, சந்தனம், குங்குமம், புஷ்பம் அணிவிக்கவேண்டும், (வளரும்)

சிரமதானச் சிரேட்டர்

உழவாரப் பணிசெய்த உத்தம குரவர்

சித்திரைச் சதயம் — தெய்வீக நெறித் தவ சிரேட்டரின் குருபூசைப் பெருநாள்.

தமிழோடிசை பாடி இறைவனை ஏத்த மறவாத சைவ சித்தாந்தத் திருத் தொண்டரின் நினைவு நாள்,

'நற்றுணையாவது நமச்சிவாயவே' என்ற உண்மையை நாட்டு மன்னன் மூலம் நல்லுலகுக்குக் காட்டிய நாயனார் சிவபதமெய்திய திருநாள்.

உடல் உறுப்புக்களுக்கெல்லாம் உரிய பயிற்சியளிக்கும் திட்டம் வகுத்து திருவங்கமாலைத் திருப்பதிகம் திருவாய் மலர்ந்த சிவனடியாரைச் சிந்தை செய்ய வேண்டிய அரு நாள்.

வைதிகசைவம்

[கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை]

(முன் வளர்ச்சி — 6)

இமயமலையிலே ஒரு சரித்திரக் கணவாயிருக்கிறது, அதன் வழியாலேதான் மிலேச்சர்கள் ஆதியில் வரத் தொடங்கியவர்கள், அவர்கள் தெற்கு நோக்கி வந்தார்கள், பாரத கலாசாரமும் தெற்கு நோக்கி வரத் தொடங்கியது, மகமதியர்கள் தெற்கே அதிக நாசம் செய்யவில்லை. சைவமும் ஆலயங்களும் தெற்கேதான் உயிர் வாழ்ந்தன. இப்பொழுது மிலேச்சர்கள் பத்துத் திக்கிலுமிருந்து வரலாம். இனி ஆலயத்துக்கு இடமில்லை. இறுதியாகச் சைவம் சரணடைந்த இடம் யாழ்ப்பாணம ஆகலாம். கடல் சூழ்ந்திருந்தது. கலாசாரம் சிறிது காலங் குடியிருப்பதற்கு வாய்ப்பாயிருந்தது,

இப்பொழுது உலகத்தில் வைதிகமும் இல்லை; சைவமும இல்லை. இவன ஒரு வைதிகன என்று நிந்தனை தொடங்கியிருக்கிறது,

காசிபர் சூரன் முதலிய தம்புதல்வர்களை "சான்றவர் ஆய்ந்திடத் தகக ஆம் பொருள் மூன்றுள" என்று ஒரு பாடந் தொடங்கினார். அவர்கள் நித்திரை போனார்கள். அது கண்டு அவர் அப்பாடத்தை நிறுத்தித் 'தருமம் என்று ஒரு பொருள் உளது' என்று பாடந் தொடங்கினார். அது வைதிகத்தின் ஆரம்ப பாடம். 'அறஞ் செய விரும்பு' என்ற பாடத்துக்கு மூன்று படி கீழேயுள்ளது; அறத்தைத் தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என நான்காக வகுப்பர், சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகுதலதான மோக்ஷம். தீச சார்பு கெடுதலதான மோக்ஷம். அஃதாவது விட வேண்டியவைகளை விடுதல். இது அறத்தின் பரிபூரணம், வீடு பேற்றுக்கு அது தொடக்கம். அதற்குத் தருமம தொடக்கம். அந்தத் தொடக்க பாடத்தைக் காசிபர் தொடங்கினார், அதனைப் பார்த்துக்கொண்டிருந்தவள மாயை "நன்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

பிங்கள ஆடு சித்திரை மீ உச - உ வெள்ளி

குறிக்கோளை மறக்கலாமா ?

எந்தவொரு மதமும் சொந்தமான குறிக்கோளைக் கொண்டிருப்பதுண்மை. இறை இலட்சியம் என்று எடுத்துரைப்பர் அறிஞர். முத்தியடையும் பொருட்டே உடம்பெடுத்தோம் என்பது சைவ சமயிகளின் எழிலான இலட்சியம். இந்த நிலையை அடைவதற்கு 'நான்' 'எனது' எனும் ஆணவம் அகல வேண்டும் என்று சாத்திரங்கள் போதிக்கின்றன.

மெய்யறிவு முதிர்ச்சி பெற்ற சமய குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் மிக அருமையாக இந்த நிலையை "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்ற கருத்தில் அமைத்திருக்கின்றனர்.

ஆணவம் மேற்கொண்டிருக்கும்வரையும் உண்மையான குருவைப் பின்பற்றும் எண்ணம் எழமாட்டாது. தவத்தினால் வரம்பெற்ற சூரனும் தடுத்தது மானம் ஒன்றே என்று இறுதியிலும் உறுதி கொண்டான். அவத்தினால் அல்லலுற்றான் அன்றோ ?

எனவே சைவ சமயிகள் சமூக முன்னேற்றத்திலே பங்கு கொள்ளும்பொழுது மதக்கொள்கையின் மூலமாகிய தன்னயம் இன்மையை நெறியாக நடத்தல் வேண்டும்.

அரசியலிலே அறம் என்ற அம்சம் அத்தியாவசியகம் என்பதைச் சைவ சமயிகள் மறந்துவிடக் கூடாது. அவ்வாறாயின் அரசஅவை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவேண்டியவர் சமய நெறியடிப்படையிலே தாமாக முன்வராது தம்மை ஏனையோர் வாருங்கள் என்று அழைப்பதையே விரும்புதல் நன்று. இவ்வாறே ஏனைய மதத்தவர்களுக்கும் இயல்பாயுள்ள அறநெறியுண்டு. ஆகையால் இக்நாட்டின் அரசியல் அவை அங்கத்துவத்துக்கு யாரும் கங்கணங் கட்டி முன்வராதிருக்கும் நிலை ஏற்படும். இதையே மக்கள் இதய பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள்.

வைதிக சைவம்

(1 - ஆம் பக்கத்து வளர்ச்சி)

னய மாயவள் நகைத்துக் கூறுவாள்". அவள்களுக்கென்று சிரித்துக் காசிபரைப் பரிகாசஞ் செய்துவிட்டாள். இந்தப் பிள்ளைகளுக்குந் தருமத்துக்கும் எவ்வளவு தூரம் சருகு பக்ஷணிகளாகிய முனிவர்களின் வற்றல்களாகிய பிள்ளைகளுக்குச் சொல்லுகிற பாடங்களை, மாயையாகிய நான் பெற்ற பிள்ளைகளுக்குத் தொடங்குவது அடாது என்றாள் அவள். காசிபர் நாணித் தலைகுனிந்து உபாத்தியாயர் வேலையை ஏடுகட்டினார். மாயை அந்தப் பிள்ளைகளைச் சுக்கிரனிடம் அழைத்துச் சென்றாள்.

சுக்கிரன் 'கொலையொடு களவு காமம் நிலையெனப் புரிதிர்' என்று பாடந் தொடங்கினார். ஏதோ ஒரு கலியுகத்திலேதான் அந்தப் பாடம் நடந்திருக்க வேண்டும். இப்பொழுது அதே பாடந்தான் இந்த உலகத்தில் நடக்கின்றது.

கலியிலே எவருக்காயினுந் தருமம் விளங்காது; விளங்குவதற்கு வழியுமில்லை எங்கேயாவது விளங்கினவர்கள் அருமையின் அருமையாக இருந்தால் அவர்கள் இறுகக் கண்ணை மூடிக் கொள்வார்கள். இந்த உலகத்தைப் பார்க்க மாட்டார்கள். கலி, 5000 க்குப் பின் கண் திறக்கவே மாட்டார்கள். இது நன்கு சிந்தித்தற்குரியது.

இப்பொழுது வைதிகர்கள் என்று இருப்பவர்கள் அவைதிகர்கள், வேதப் பொருளை ஒரு நாள் ஜனகர் முதலியவர்கள் தெளிவிக்க வேண்டுமென்று தக்ஷிணாமூர்த்தியிடம் கேட்டார்கள். இப்பொழுது அவ்வளவு கட்டமில்லை. பீ. ஏ. பரீட்சைக்குச் சம்ஸ்கிருதம் எடுப்பவர்கள் வேதத்துக்குப் பொருள் விரிப்பார்கள், மிலேச்சர்கள் பொருள் விரித்த புத்தகம் அவர்கள் கையில் இருக்கிறது, 'நரிப்பாய் நாயேன் இருப்பேனோ' என்பதற்கு 'நரி பாய்ந்த நாய் போல இருப்பேனோ' என்று ஆங்கிலத்திற் பொருள் விரித்த திருவாசகமும் அவர்களிடம் உண்டு.

வேதாங்கங்கள் தெரியாதவர்களுக்கு வேதம் விளங்காது; அதுவும் குரு மரபில வர வேண்டும். அது நிற்க.

சைவம் முதலிய உண்மைச் சமயங்களுக்கு இப்பொழுது இப்பொழுதைய வைதிகத்துக்குரிய மதிப்புக் கிடையாது.

சைவத்தை தத்துவக் கட்டுள்ள. தருக்க ரீதியில் அமைந்த ஒரு சமயம் என்று மேலைத் தேச தத்துவ

[வளர்ச்சி 3- ஆம் பக்கம்]

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்
சைவசமயபாடப் பரீட்சை 1976

நவம்பரில் நிகழ்ந்த பெறுபேறுகள் :

அகில இலங்கைப் பரிசில்கள்

2 - ஆம் வகுப்பு

தனரூபன் பாலசுப்பிரபணியம் வட இந்துமகளிர் கல்லூரி
விஜயசரோஜா இராசலிங்கம் யா. சன்மார்க்க மகா வித்
றஜனி இராசரத்தினம் மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

3ம் - ஆம் வகுப்பு

உஷாகாந்தி சற்குணலிங்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரி
சிவாஜினி கணேஷ் வட இந்துமகளிர் கல்லூரி
லோகேஸ்வரி நாகமணி புதுக்குடியிருப்பு சி. சி- த. க. பாட

4 - ஆம் வகுப்பு

கணேசானந்தன் சபாரத்தினசர்மா மகாசனக் கல்லூரி தெல்
புஷ்பஜோதி கந்தையா யாழ் இந்துமகளிர் கல்லூரி
அருணகிரிநாதன் தங்கத்துரை யாழ், இந்து கனிட்ட வித்
அருள், கனகசபை சிவசுப்பிரமணியம் அநுராதபுரம் விவே, வித்

5 - ஆம் வகுப்பு

மனோரஞ்சனி திருநாவுக்கரசு காரை, சுந்தரமூர்த்தி வித்
சோபனா சர்வேஸ்வர ஐயர் வட்டு சுப்பிரமணிய வித்
கலையரசி பொன்னையா இறுபிட்டி த, க, பாட;

6-ஆம் வகுப்பு

றஜிதா இராமலிங்கம் யாழ்; இந்து மகளிர் கல்லூரி
புஷ்பலதா திருநாவுக்கரசு ஸ்ரீசோமாஸ்கந்தசுல்லூரி புத்தூர்
கீதா குமாரகுலசிங்கம் யாழ், இந்து மகளிர்கல்லூரி

7 - ஆம் வகுப்பு

ரோகிணி குமாரசாமி இராமநாதன் கல்லூரி சுன்னாக
முருகையா சங்கரப்பிள்ளை புதுக்குடியிருப்பு மகா வித்,
வசந்தி சுப்பிரமணியம் வட, இந்து மகளிர் கல்;

8 - ஆம் வகுப்பு

யசோதா மருதலிங்கம் (தங்கப்பதக்கம்) ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி புத்தூர்,
ரேவதி மரணிச்சுவாசகர் யூனியன்கல்லூரி தெல்லிப்பழை
கீதாஞ்சலி பஞ்சலிங்கம் வேம்படி மகளிர் கல்லூரி

9-ஆம் வகுப்பு

பிரபா தம்பிராசா (தங்கப் பதக்கம்) யா. இந்து மகளிர் கல்-
ஸ்ரீசுயந்தி வேலுப்பிள்ளை ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி புத்-
ராஜகௌரி இரத்தினவேல் மகாஜனக் கல்லூரி தெல்லி,

10 - ஆம் வகுப்பு

சிவரமணி நல்லையா (தங்கப் பதக்கம்) வேம்படி மகளிர் கல்
சிவகௌரி அநவரத விநாயகமூர்த்தி வேம்படி மகளிர் கல்.
மஞ்சுளா ஆறுமுகம் உரும்பராய் இந்துக் கல்லூரி

அகில இலங்கை ஆறுதல் பரிசு

நளாயினி ஸ்ரீநிவாசன் நல்லூர் இந்து த- க; பாடசாலை
வாகீசன் சாமிநான் லண் நாவலர் மகா வித்தியாலயம்
சசிகரன் கனகரத்தினம் மகாஜனா கல்லூரி தெல்லிப்புழை
பிரபாங்கன் சுந்தரலிங்கம் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி-
X மங்களராணி கிறிஸ்ரோபர் மெதடிஸ்ற் மகளிர் கல்; பருத்-
ரோகிணி இராமையா ஹைலண்டஸ் கல்லூரி கற்றன்
செல்வராணி சிதம்பரப்பிள்ளை மகாஜனக் கல்லூரி
X பகீரதன் பரந்தாமன் யாழ்; இந்துக் கல்லூரி

X இவ்வடையாளமிட்ட இருவரும் கண் பார்வையற்றவர் பிறெயிலி முறையில் பரீட்சை எழுதினர்.

பெய்யா மழை பெய்கிறது

சித்திரைச் சிறுமாரி என்ற பழமொழி சென்ற சில காலமாகப் பொய்த்து விட்டது என்றாலும் 'பிங்கள'ச் சித்திரை பிழை விடவில்லை.

சித்திரை இருபத்தெட்டு-குருவித்தட்டு என்ற மூதுரையை நினைவுக் கழைக்கும் வகையிலே இப்பொழுது நாடெங்கும் நல்ல மழை பெய்கிறது வெப்பம் தணிந்திருக்கிறது — அக்கினி நாட் காலமாயிருந்தும்.

ஆனால் வெங்காயம் மிளகாய் முதலிய பயிர்களுக்கு சில இடங்களில் ஆபத்தும் நிகழ்ந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

எனினும் பழையபடி காலபோக இயற்கையை மக்கள் காணக் கூடியதாக இருக்கிறது.

இந்தக் குளிர்ச்சியிலே தேர்தல் அபேட்சக வெப்பம் தணியாதிருப்பது குறிப்பிடத்தக்கது. வெப்பு நோய்க்கு மருந்து வெண்ணீறு தேர்தல் நினைவை விட்டுச் சீர் பொலியச் சிவநெறி வாழ இந்த இளவேனிற் பருவத்தில் இயற்கையின் உதவியுடன் வேகங் குறைந்து கருமம் ஆற்ற முடியாதா — நாம்.

திருவிளையாடற் புராண விரிவுரை

9-5-77 முதல் 19-5-77 வரை தினமும் இரவு 7 மணி தொடக்கம் 8-30 மணி வரை வண்ணை அரசடி விநாயகர் ஆலயம் மண்டபத்தில் நல்லை, ஞான சம்பந்த ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்கள்.

அறிவித்தல்

6-5-1977 திகதி வெளிவர வேண்டிய இந்துசாதனம் எதிர்பாராத சந்தர்ப்பத்தினாலே பிந்தியமைக்கு வருந்துகின்றோம்.

— பதில் அதிபர்.

A Baratha Natya ....

(Continued from page 4)

the bhavas (emotions) follow the mind; and the rasa follows the bhavas" was well demonstrated. It is sincerly hoped that the young artiste will continue to study and practise more of this art so that one day she will blossom forth into a Rukmini Devi or Balasarasvati.

The Chief Guest at the function Prof. K Kailasanathakkurukkal while speaking, emphasized the impertance of Bharata Natyam in Hindu culture especially in the temple. Dr. A. Shanmugadas a guest speaker suggested that the artiste continue her studies in this art further. A good Souvenir too was released to mark the occasion.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைதிக சைவம்

2ம்-பக்கத்தி வளர்ச்சி

சாத்திரிகள் கொள்ளாரீர்கள். அவர்களுக்கு ஒரு சமயம் என்றால் வளர்ந்த வரலாறு தெரிய வேண்டும். வாற்பேத்தையிலிருந்து குரங்குக்கு வந்து அப்பால் வால் போய் மனிதன் உதித்தான் என வரை வரையாக வளர்ச்சி தெரிய வேண்டும்; கிரேக்க சமயம் பூத சமயம் வளர்ந்த வரலாறு போல் வளர்ச்சி வரலாறு சைவத்துக் இல்லை என்பார்கள்.

இக்கால சமயத்தை ஆராய்ச்சிக்காரர் உலோகாயதம், பௌத்தம் முதலிய புறச் சமயங்களுக்குக் கொடுக்கும் மதிப்பைத் தானும் சைவத்துக்குக் கொடுப்பதில்லை. அது ஒரு குருட்டுச் சமயமென்பது அவர்கள் கருத்து. அவர்கள் சொல்லுவதில் ஓர் உண்மையுண்டு, குருடர்களுக்குத் தெரியாத சமயம் அந்தச் சமயம். நாமோ குருடர். அதனைக் காணக் காட்ட நம்மால் மூடிவதின்லை. அவ்வளவில் அவர்கள் சொல்லுவது நீதி.

இமாசலக் குகையிலிருந்த ஒரு சித்தன் அபமலை முழுவதிலுமுள்ள மூலியின் குணங்களைச் சொல்லி விடுவான். அவனிடம் பரிசோதனைக் கருவியாதும் இல்லை. அவனுடைய அந்தக் காரணங்கள் பளிங்கு போன்று பரிசுத்தமானவை. அவன் எல்லா மூலிகளைப்பற்றியும் சொல்லுவான். இதனை அழுக்கு மூடிய அணுக்குண்டு மனிதன் நம்பமாட்டான், அவன் ஒரு மூலியை எடுத்து, ஒரு நூறு குரங்களிற் பரிசோதித்து, ஒரு நாள் தான் பெரிய காரியத்தைக் கண்டதாகச் சரித்திர பூர்வமாகச் சொல்லுவான். முன் அதுபற்றிச் சொன்னவர்கள் குருட்டுத்தனமாகச் சொல்லி இருக்கிறார்கள் என்பான். யார் குருடர் என்பது கண்ணுள்ளவர்களுக்குத்தான் தெரியும்.

விஞ்ஞானிகலர், பிரளயாகலர் கண்ட உண்மைகளுக்கு இக்கால மனிதன் விரும்பும் சரித்திர வளர்ச்சி எப்படி வரும்! மனிதன், தான் வளர்ந்து அந்த உண்மைகளைக் காணவேண்டும் என்கின்றது சாத்திரம். (வளரும்)

அப்பர் அடிகள் திருவுருவப் படம் வேண்டுமா?

11-5-77 திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்தை யாழ்ப்பாணம் மில்க் வைற் தாபனத்தார் இலவசமாகவழங்கும்சலாக்கியதிதைச் சைவசமயிகள் பயன்படுத்த அருந்தருணம் இது.

சிதம்பரம் கோயில்

1-ம் பக்கத்து வளர்ச்சி

திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் ஸ்ரீ நடராஜரின் திருக்கோயில் அரசர்களால் கட்டப்பட்டதென்றும், அதன்பிறகு காஞ்சிபுரம் பச்சையப்ப முதலியாரவர்களால் திருப்பணிகள் செய்யப்பட்டு அதற்குப் பின்பு செட்டி நாடு அரசர் எம். ஏ முத்தையா செட்டியார் அவர்களின் முன்னோர்களால் பெரும் திருப்பணிகள் கடைபெற்றுள்ளன என்றும், 1952ம் ஆண்டில் ஆடிர் இரத்தின சபாபதிப்பிள்ளை அவர்கள் (இப்பொழுது திருப்பணிச் சபையின் தலைவரான திரு ஆர். கனகசபைப்பிள்ளை அவர்களின் தந்தையார், திருப்பணிச்சபைத் தலைவராக இருந்த திருப்பணிகளை நடத்திய பின் இப்பொழுது அன்னரின் குமாரர் திரு. கனகசபைப்பிள்ளையவர்களைத் தலைவராகக் கொண்டதிருப்பணிச்சபை அரும் தொண்டாற்றி வருகிறது என்று கூறினர்.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை — அருள் இல்லாருக்கு அவ்வுலகமில்லை'' என்ற முதுமொழி கூறி நமுடைய நாட்டு நாணயம் அமெரிக்க நாட்டில் செலாவணி செய்ய முடியாது ஆனால் அமெரிக்க நாட்டில் பவுண் நாணயம் செலாவணியாக உள்ளது, ஆகவே நம்முடைய நாட்டு நாணயத்தைப் பவுண் நாணயமாக மாற்றி அந் நாட்டில் நாமும் செலாவணி செய்தல் வேண்டும். அது போல இவ்வுலகில் பொருள் உளளவர்கள் அவ்வுலகில் அருள் இடம் கிடைப்பதற்கு 'கோயில்'' என்ற வங்கியில் இப்பொழுதிருந்தே பொருளைச் சேமிப்பு செய்துகொண்டே வந்தாற்றான் அவ்வுலகில் நாணய செலாவணியாகி அருள் இடம் பெறமுடியும். ஆகவே மக்கள்தான் முன் வந்து கோயிலின் திருப்பணிகளை 2 அல்லது 3 ஆண்டுகளில் நிறைவேற்றி வைக்கும்படி கேட்டுக் கொண்டு. விழா தலைக்கத்தின்முன்னர் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ நடராச மூர்த்தியை தரிசனம் செய்து மொண்டு அரசின் மான்யமான ரூ 1 இலட்சத்து 25 ஆயிரத்தையும் திருப்பணிச் சபைத் தலைவர் உயர்திரு ஆர் கனகசபை பிள்ளை அவர்களிடத்தில் வழங்கி, திருப்பணி நன்கொடைப் பற்றுச்சீட்டுகளின் விற்பனையையும் தொடக்கி வைத்தார்.

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. 598 ஈடி

இராமசாமி கைம்பெண் கண்மணியம்மா நீராவியடி யாழ்ப்பாணம்

எதிராக — வாதி

1. கந்தையா நாகரத்தினமும்
2. பெண் சிவபாக்கியசுந்தரமும் இருவரும் சித்தங்கேணி

பிரதிவாதிகள்

மேற் குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 17-ந் திகதி (17-6-1977) வெள்ளிகிழமை காலை 10.00 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 21,000/—]

தீர்வைத்தொகை

ரூபா 7,460/— உம், மேலும் ரூபா 4,000/— க்கு 27.3.1975 தொடக்கம் 5-3-1976 வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் பின்னர் விற்பனவுத் திகதிவரை 5 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 669-80 சதமும்.

ஆதன டாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்காணைக் கோயிற்பற்று இறை பெரிய தோட்டம் பரப்பு நிலை இலாச்சம் 3½ மூன்றரையும் வீடும் வான் பயிர் செய் பயிர்களும் கிணற்றுப் பங்கும் எல்லை கிழக்கு சண்முகம் கணபதிப்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு கைபொழுங்கை. மேற்கு ரோட்டு. தெற்கு குமாரசாமி பெண் நேசம்மாவின் ஆதனத்திற்குப் போகும் கையொழுங்கை. இதடங்கலும்.

தி. வேலுப்பிள்ளை J. P.

[ஏலதாரர், நீதிமன்ற விற்பனவு ஆணையாளர், விலைமதிப்பாளர்]

கெச்சர் வாசம்"
வல்வெட்டித்துறை
4-5-77

14-6-5

அடைவுகடை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதியில் அடைவு பிடிக்கும் ஆ. சக்திவடிவேல் அவர்களின் அடைவுகடையில் 1976-ம் ஆம் பங்குனி மீ 31-ம் திகதி வரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1977 ம் ஆனி மீ 20 ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் மேற் அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர்,
23-4-77.

வை. ஏரம்பமூர்த்தி,
ஏல விற்பனையாளர்,

எம். 11· 6, 13-5—

நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம்

வழக்கு இல. 111/12315 (ஈடு.)

சரணவாய் வடக்கு 1 சேதர் பொன்னையா முருகையா (இறந்துவிட்டார்)

2, பெண் பரமேஸ்வரி — வாதிகள்

எதிராக

சரணவாய் வடக்கு, சின்னவன் ஆழ்வாப்பிள்ளை, தற்காலம் மட்டுவில் அம்மன்கோவிலடி சாவகச்சேரி வடக்கு சாவகச்சேரி - பிரதிவாதி

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1977 மி ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி (15-6-1977) புதனகிழமை காலை 10 மணி தொடக்கம் குறித்த காணியில் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

[கோட்டால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூபா 2,500/—]

தீர்வைத் தொகை

ரூபா 1,428 — 75 உம். ரூபா 750/-க்கு 19-8-1973 தொடக்கம் 2-5-1974 வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டி வீதமும் 3-5-1974 தொடக்கம் விற்பனவுத் திகதி வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 6 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 308-20 சதமும்.

ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் கொற்றுவத்தைக் குறிச்சி 'வாரி சீமா' நிபர 3 மிடி வாரி சீமா நிபர 3½ இவைகளில் வடக்கரைவாசிக்கு நிபர 3½ இதில் தெற்குப் புறமாக 1/3 பங்குக்கு நிபர 2½ இதுவும் மிடியிறை பெரிய சீமா நிபர 3 வாரி நிபர 3 இதுவும் ஒரே துண்டாயிருக்கின்றது, கூடிய நிபர 8, 1/6 இதில்- ஆட்சிப்படி 8, 1/4- இதில் வடக்குப் புறமாக நிபர 7 நீக்கி மிகுதி தெற்குப புறமாக நிபர 1, 1/4 எல்லை கிழக்கு றோட்டு வடக்கு சின்னவன் மகள் மெய்வானைக்குடையவாதனம், மேற்கு வல்லி பெண் சிவாசிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். தெற்கு வேலன் மாணிக்கனுக்கும் மறுபேருக்குமுடையவாதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், மாமரம் பனை மால் அடங்கலும்-

தி. வேலுப்பிள்ளை J. P.

'கெச்சர் வாசம்'
வல்வெட்டித்துறை
4-5-1977.

ஏலதாரர். நீதிமன்ற விற்பனவு ஆணையாளர். விலைமதிப்பாளர்

18. 6-5-

அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா மானம் உடைய தரசு.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M.B 823

கோலயுதர் திருநாவுக்கரசு வட்டுக்கோட்டை மேற்கு — வழக்காளி

எதிராக

1. நாகர் வேலுப்பிள்ளையும் பெண்
2. சின்னம்மாவும் இருவரும் மூளாய் சுளிபுரம் — எதிராளி

மல்லாகம் டிஸ்றிக் கோட்டின் MB 823- இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1977-ம் ஆம் வைகாசி மீ 18-ந் (18-5-77) புதன்கிழமை முற்பகல் 10-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1500/— ம் 8-3-75 தொடக்கம் 26-5-76 வரைக்கும் ரூபா 1000/— க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 487 சதம் 70.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு சங்காணைக் கோயிற்பற்று மூளாய் தெற்கு பெரியகாடு ப. நில இலாச்சம் இரண்டரை (2½) யும் வீடும் கிணறும், வான்பயிர் செய்பயிர்,

திருவிளையாடற் புராணப் பூர்த்திப் படிப்பு

திருவருள் முன்னிட்டு சைவ பரிபாலன சபை ஆதரவில் சபை காவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவிளையாடற் புராணத்தின் பூர்த்திப் படிப்பு அர்ச்சனைப் படலம்) 6-5-77 வெள்ளிக்கிழமை விசேட பூசை ஆராதனைகளுடன் நடைபெற்றது. சைவப் பெரியார் திரு. சி. தம்பியையா, ஆசிரியர் க. முருகேசு, ஆசிரியர் க. தர்மலிங்கம் முதலியோர் புராணப் படிப்பிற் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

களும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு இரத்தினம் பெனசரஸ்வதிக்குரிய ஆதனம். மேற்கும் தெற்கும் செல்லப்பா இரேய தம்பிக்குரிய ஆதனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும். வடக்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் மூன்றிலொரு பங்கும் இறைவாய்க்கால் வழி உரித்தும்.

சோ நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், மதிப்பாளரும்.
தொல்புரம், 13-3-77.

121 6—5

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

நான் என்றும் தான் என்றும் நாடி நான் சாரவே,
தான்என்ற நான்என்ற இரண்டலாத் தற்பதம்
தான்என்ற நானென்ற தத்துவம் நல்கலால்,
தானென்றும் நான்என்றும் சாற்ற கில்லேனே.

When I think of me and God (as separate entities) and contemplate on and worship Him (objectively), the Lord indicated by the word Tat (in the தத்துவமசி Tatuwamasi formula) who is in Adwaitha relation with me makes me realize the truth that He and I are non-dual. Then I cease to speak of Him objectiveiy as separate from me (and enjoy non-dual bliss.

Hindu Organ

Friday, May 6, 1977

Confusion at this Crucial Juncture

Leaders of the Tamil speaking community who had ceased to exist in this wide world — those departed souls — would become uneasy, if they could have the power of perception of the problems that are baffling the people whom they had the privilege to lead for decades, particularly at the present moment when the General Election which was eluding the voters for two full years is almost a reality.

The people and their propagandists should do well to understand that there is a tide in the affairs of men which when taken at the flood leads on to fortune. The events of the past five months have provoked the people into a sense of duty that demands the forgetting of differences, petty or consequential. Just at this time when the climate is comfortable and congenial to enable the making of unanimous arrangements for the uncontested return of representatives to the National State Assembly in the name of the Tamil speaking people, it is inexplicable that there should be misunderstandings, misgivings and even mutterings which tend to undermine the efforts to achieve real unanimity.

It is at this crucial juncture that the Gandhian aspect of political activities should be understood and appreciated. The history of the Gandhian Movement in Bharata Nadu must be related to the people by means of discourses on the platform and exposition in the press. The fact that Mahatma Gandhi never sought election to the Legislative Assembly should be repeated at every political meeting; so should be the details of how leaders relinquished their legislative duties and spent their entire time amongst the people educating them in the proper way of political thinking.

That the conception of the political movement of the Tamil speaking people is, without reservation founded, on the Gandhian philosophy is an accepted fact. Non-violence is not a mere slogan, it is not confined to only deeds. It is a religious maxim that is reflected in that significant word அன்பு which has no exclusive equivalent in other languages though 'love' approximates to it in a way It requires the thought, the word and the deed to be unreservedly Ahimsa. Expounding further, the Gandhian doctrine, it would be non-violence if dissensions are caused. Elimination of even the slightest symptom of dissension can be effected only by அன்பு which when paraphrased requires the willingness to do personal sacrifice.

And who is ready to take this yogic exercise of self-sacrifice?

Seventy-fifth Anniversary of the Colombo Vivekananda Society

In connection with the 75th Anniversary Celebrations of the Colombo Vivekananda Society, we have pleasure in publishing the report of the inaugural meeting of the Society held on 20-7-1902.

We are thankful to Mr. S. Sivasubramaniam, the veteran Hindu Leader of Colombo, for favouring us with this valuable piece of information.

"In reponse to an appeal by Mr. M. S. Eliatamby, several Hindu gentlemen assembled at No. 63, Wolfendhal Street on the evening of the 13th instant, to consider the desirability of organising a Society for the promotion of religious study among the Hindu young men of Colombo. The meeting commenced at 3 p. m. Mr. V. Karalapillay of the General Treasury took the chair on the motion of Mr. J. P. Thampoo seconded by Mr. M S. Eliathamby and Mr Vythianathan was elected Secretary on the motion of Mr. S. Vythialingam seconded by Mr. P. Murugesu

In the address from the chair, reference was made to the sad and irreparable loss to the Hindu Community had sustained by the sudden and unexpected death of the much revered Swami Vivekananda to whose stirring lectures, he said the religious enthusiasm of the Hindoos was entirely due.

Mr. C. M. Kumaravelupillai explained the object of the meeting in an able speech. The other speakers were Messrs. C. S Tambusamy, S. Vythialingam Thillainathan, R. S. Subramaniam and M S Eliathamby.

The first resolution that a Society be formed for the promotion of spiritual knowledge of the Hindu young men of Colombo, was proposed by Mr. S Vythianathen, seconded by Mr. C. M. Kumaravelupillai and carried unanimously.

Mr. C. S. Tambusamy proposed, and Mr. C. M. Kumaravelupillai seconded "that this society be called the Vivekananda Society".

The Chairman and the Secretary of the meeting and Messrs. R. S, Subramaniam, C. M Kumaravelupillai. S. Canagaratnam, A. Chellappa, C. S. Tambusamy, S Thillainathan, M S. Eliatamby and S. Vythilingam were elected to form a Committee to draft the rules of the Society on the motion of Mr. S. Vythialingam seconded by Mr. P. Nagalingam.

The Chairman proposed and Mr. R. S. Subramaniam seconded that a Vote of Thanks be paased to Messrs. C, M. Kumaravelupillai, M. S. Eliathamby and C. S, Tambusamy for their efforts to bring about the meeting.

The meeting came to a close with a vote of thanks to the Chair, proposed by Mr. S. Vythialingam and seconded by Mr S Canagaratnam.

Sgd: S Vythianathan
Secy. Pro. Tem.

Sgd: V. Karalapillai
20th July 1902 President

A Bharata Natya Aranketram

BY V. SIVASAMY

A glamorous Bharata Natya Aranketram of the yeung and pretty Dharini daughter of Dr. Ganesah and a student of Miss Santa Ponnudurai took place with all the formalities and ceremonies at the Veerasingam Hall, Jaffna on the 15th April. This was a full Bharata Natya performance which commenced with 'Alarippu' and ended with the Thillana and Mangalam The hall was fully crowded with hundreds of rasikas and well-wishers.

After the invocation to the Lord Ganesha and the Lord of Dance(Siva) and a short puja by the priest, the parents, the guru and the troupe attending to the musical accompaniments paid homage to God Siva. Then followed the famous composition on the Lord Ganapati beginning with 'Vatapi Ganapati! The Natya proper commenced with 'Alarippu' the flowering of dance This was followed by the 'jatiswara' and 'sabda' where the 'nrtta' (pure dance) was performed and bhavas were indicated. Following the Sabdha, varnam and padam were well performed to some important musical compositions in Tamil, Telugu and Sanskrit. Generally the mudras, bhavas and abhinayams were displayed well One may specially refer to the beautiful Varnam to the Lord Ranganatha and the padam composition — composition on the Lord Muruka, the Astapadi of Jayadeva on Krishna and the kirthanam Lord Siva. Following the Javali of the sports of Krisna and the viruthum on Lord Muruka, the Thillana was performed well as crowning the entire Aranketram. The Mangalam ended the Aranketram.

On the whole it was a very worth while and interesting Aranketram on one of the best, if not the best form of the expression of the Hindu Art—Bharata Natyam. Nowadays, it is a happy augury that such Aranketrams are held frequently in Sri Lanka and India as this art is becoming popular.

The young artiste being well-trained in our land has not generally deviated from the best traditions of the art as practised in the home of Bharata Natyam—Tamilnadu. Some of the finer points of art as expounded by the sage Bharata, Nandikesvara and others were displayed to the satisfaction of ten rasikas Though at times, the young artiste looked tired and thereby some of the movements seemed slow, she played her role very well. The apt synchronization of the movements of the leg, the hand and the eyes as well as the facial expression to the musical composition is noteworthy, The idea of the theorist that "the eyes follow the (mudras of) the hands; the mind follows the eyes;

(Continued on page 2)

வாய்மூடிக் வழாது பெய்த மனிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரச செய்க குறைவிலா துயிர்க்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday May 6, 1977.

EDITOR-IN-CHIEF R. N. SIVAPRAKASAM

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org